# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1988 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, தேசிய தொழிற் பயிற்சி (திருத்தச்) சட்டம்

[1988, சனவரி 20 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1988, சனவரி மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 75

# 1988 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய தொழிற்பயிற்சி (திருத்தச்) சட்டம்

[1988 ஜனவரி 20 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஒ. 17/85

## 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, தேசிய தொழிற்பயிற்சிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினல் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டமானது 1988 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய தொழிற்பயிற்சி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் 1971 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, தேசிய தொழிற்பயிற்சிச் சட்டத்தின் 5 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (இ) என்ற பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(இஇ) எவரேனும் ஆளினல் மேற்கொள்ளப்படவேண்டிய தேசிய வியாபாரச் சோதனைகளைத் தீர்மானித்தலும் தகைமை பெறுபவர்களுக்குத் தேசிய வியாபாரச் சான்றிதழ்களை வழங்குதலும் ;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7அ என்ற புதிய பிரிவை உட்புகுத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவானது இத்தால் உட்புகுத்தப்படுவதுடன் இது அச்சட்டவாக்கத்தின் 7அ என்ற பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"தேசிய வியாபாரச் சோதனையை நடாத்துவதற்கான தத்துவம்.

7அ. (1) அமைச்சரினல் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் தீர்மானிக்கப்படக்கூடியவாறன அத்தகைய வியாபாரங்கள் தொடர்பிலான தேசிய வியாபாரச் சோதனைகளை நடாத்துவதற்குச் சபையானது தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) பின்வரும் ஆட்கள் தேசிய வியாபாரச் சோதனைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாதல் வேண்டும்:—

(அ) வியாபாரச் சோதனையொன்றை மேற்கொண்டு சபையினல் வழங்கப்பட்ட சான்றிதழொன்றைப் பெற்ற தொழில் பயிலுநர்கள்; அத்துடன்

(ஆ) சபையின் அபிப்பிராயப்படி குறிப்பிட்டவொரு வியாபாரத்தில் போதிய பயிற்சியை மேற்கொண்டுள்ளவர்களும், தொழில் பயிலுநர் அல்லாதவர்களுமான ஆட்கள்.

2 சீ—096936—2.810 (08/87)

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் தகவுடைய ஆளொருவர், தேசிய வியாபாரச் சோதனையொன்றுக்குத் தோற்றுவதற்குப் பதிவுசெய்யப்படும் நோக்கத்துக்காக விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் சபைக்கு விண்ணப்பிக்கலாம்.

(4) தேசிய வியாபாரச் சோதனையொன்றில் சித்தி பெற்று அதன்மூலம் குறிப்பிட்ட ஒரு வியாபாரத்தில் தேவையான திறமையையும், தேர்ச்சித் திறனையும் பெற்றுக்கொண்ட ஒவ்வோர் ஆளுக்கும், சபையானது, தேசிய வியாபாரச் சான்றிதழொன்றை வழங்குதல் வேண்டும்.".